அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 310

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7
30 ஒக்டோபர், 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கடன்கள்/முற்பணம்

03-06-1985ஆம் தேதிய 293 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற் றறிக்கையுடன் தொடர்புடையது.

02. கீழ்க்காணும் பகுதியை 1.6 ஆம் உபபிரிவுடன் சேர்த்த வேண்டும்.

கடன்/முற்பணத் தொகையில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையானது "அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம்" என்னும் கணக்கில் பற்று வைத்து உத்தியோகத்தரை எடுக்கும் திணைக்களம் அவரை விலவிக்கும் திணைக்களத்துக்குச் செலுத்துதல் வேண்டும்.

03. சிங்கள பிரதியின் 3.14-ஆம் பிரிவினுக்குப் பின்வரும் வரிசையைச் சேர்த்து கொள்ளுதல் வேண்டும்.

2.72 වැනි පොදු.ආයතන.සගුය. : .ඇමෙතුම්.පියවා.සවිස්තර.සඳහා.

04. 9-ஆம் பிரிவுடன் பின்வரும் உபபந்திகளைச் சேர்த்தல் வேண்டும்.

9.5 நிகழ்வு முறை - ஐந்து வருடங்களுக்கு (5) ஒரு தடவை.

05. சிங்கள மொழிப் பிரதியின் 10.3ஆம் பிரிவுடன் கீழ்க்காணும் உபபிரிவை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

10.3.2- ගෙවල් කුලිය සඳහා අත්තිකාරම් මුදලක් ගෙවිමට සිදුවන විට, එම මුදල තුන් වසර ඇතුළත ගෙවල් කුලිය පොළියට ලිය යුතුය.

06. பின்வரும் பகுதியை 10.6 ஆம் பிரிவுடன் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டு

ஒரு கடனுக்கு/முற்பணத்துக்கு மேல் பெற்றுள்ள ஒரு விண்ணப்பதாரரின் விடயத்தில் அவரிடமிருந்து அறவிடப்படும் தொகையானது பின்வரும் முறையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

எவரேனும் ஓர் உத்தியோகத்தர் ஒரு வகைக்கு மேல் கடன் பெற்றிருப் பாரானால் புதிதாக கடன் பெறுமிடத்து அந்த ஒவ்வொரு வகையைச் சேர்ந்த கடனையும் செலுத்த வேண்டிய முறை பின்வருமாறு கணிக்கப்படுத வேண்டும்.

புதிய திரட்டிய வேதனத்தில் முதல் ஐந்து வீதம் (5%) சம்பளக் கடனுக் காகவும் புதிய திரட்டிய வேதனத்தின் நாற்பது வீதம் (40%) வரையில அடுத்த ஐந்து வீதம் ஏனைய கடன்களை செலுத்துவதற்காகவும் முன்னுரிமை அடிப்படையில் பகிர்ப்படுதல் வேண்டும்.

(1) போக்குவரத்துக் கடன்
(2) கடலிலிருந்து நிவாரணம் பெறுதற்கான கடன்
(3) சொத்துக் கடன்

இந்த வகையில் பிரித்தொதுக்கப்பட்டதன் பின்னர் எஞ்சும் முழு நிலுவைத் தொகையும் உறுப்பினர் கடைசியாகப் பெற்றுக் கொண்ட கடனை நிவர்த் செய்தற்கான தொகையாகக் கருதப்படுதல் வேண்டும்.

இந்தச் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பிரிவில் காட்டப்பட்ட எல்லைக்குட்ப ...தாக ஓர் உடிப்பிரர் தமது விருப்பப்படி ஏதேனும் குறிப்பிட்டதொரு கட... வகையை நிவர்த்தி செய்தற்காக பெருந்தொகையை மீளச் செலுத்துதல் கூடும்.

புதிய கடன் தொகையொன்றை வழங்குமிடத்து மீள அறவிடும் முறையானது பின்வரும் வகையில் மீண்டும் விதிக்கப்படுதல் வேண்டும்.

| | |
|---|---|
| ஒரு மாதத்துப் புதிய திரட்டிய வேதனம் அல்லது அதற்குக் குறைவானது | - புதிய திரட்டிய வேதனத்... 5% |
| ஒரு மாதத்துப் புதிய திரட்டிய வேதனத்துக்கு மேல் இரண்டு மாதத்துப் புதிய திரட்டிய வேதனம் வரையிலானது | - புதிய திரட்டிய வேதனத்... 7½% |
| இரண்டு மாதத்துப் புதிய திரட்டிய வேதனத்துக்கு மேல் மூன்று மாதத்துப் புதிய திரட்டிய வேதனம் வரையிலானது | - புதிய திரட்டிய வேதனத்... 10½% |

ஒரு ரூபாயின் ஒரு பகுதியை அறவிட நேர்தலைத் தவிர்க்கும் முகமாக மீள அறவிடப்படும் மாதாந்த தவணைப் பணத்தைக் கணக்கிடுமிடத்து தவணைப் பணத்தைக் கிட்டிய ரூபாய்க்கு கணித்துக் கொள்ளுதல் வேண்டும். ஒரு ரூபாயின் ஒரு பகுதியை அறவிட வேண்டிய அவசியம் ஏற்படின் அதனை முதலாம் தவணையிலேயே அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

07. பின்வரும் பகுதியை 11.12.4 ஆம் பிரிவுடன் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

தாபனக் கோவையின் புதிய பதிப்பில் இந்த அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு இவ்வாறு அமையும்.

3.1 விலைக்கு வாங்குதல், குத்தகைக்கெடுத்தல், கொடை, உரிமை வழியில், சீதனமாக அல்லது கடைசி விருப்பாவணம் மூலம் உரிமையாகும் காணியை அல்லது காணியின் ஒரு பகுதியைக் கொள்ளுதற்கு அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபரின் முன் அங்கீகாரம் அவசியமில்லை. எனினும் இவ்வாறு கொள்ளப்படும் காணியைப் பற்றித் திணைக்களத் தலைவரின் மூலம் காணி அமைந்துள்ள மாவட்டத்தின் அரசாங்க அதிபருக்கு மூன்று மாதங்களுக்குள் அறிவித்தல் வேண்டும், பிரஸ்தாபக் காணி கொள்ளல் முறையற்றதென அரசாங்க அதிபருக்குத் தெரிந்தால், அல்லது வேறு காரணத்தை முன்னிட்டு அது வரவேற்கத் தக்கதல்ல எனக் கருதினால் தேவையான நடவடிக்கை எடுத்தற்பொருட்டு அவர் அந்த விடயத்தை உத்தியோகத்தர் கடமையாற்றும் அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

08. கடன் தொகையை/முற்பணத்தை வழங்குமிடத்து கடன் சபைகள் செய் சட்டத்தின் கீழ் அல்லது வேறு முறையின் கீழ் பெற்றுக் கொண்ட கடனின்/முற்பணத்தின் நிலுவைகள் வழங்கப்படவிருக்கும் கடன்/முற்பணத் தொகையைத் தீர்மானிக்கும் விடயத்தில் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.